DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.39/2026**

Prosecution witness **PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Saroniya | Caste | : | |
| Father Name | : | Dharmaraj | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 33 |
| Time | : | | | | |

**(Accused absent. Petition filed and allowed for accused. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **08.07.2026**

08.07.2026 முதல் விசாரணை :

1. நான் தற்போது நீலகிரி மாவட்ட சிங்கப்பெண் அதிரடி படையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் நடந்த காலகட்டத்தில் குன்னூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது கடந்த 11.04.2026ம் தேதி காலை 10.15 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது குன்னூர் தாலுகா, துணை வட்டாட்சியர் திரு.சக்திவேல் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.74/2026 சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அ.சா.1 புகார் கொடுக்கும் போதே அவர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களான 750 மி.லி அளவு கொண்ட சிகிராம் பிளெண்டஸ் பிரைடு என்ற நான்கு மதுபான பாட்டில்களை படிவம் –91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் (**அந்த படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு 10.15 மணிக்கு எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க நிலைய ஜாமீனில் 10.45 மணிக்கு விடுவித்தேன். பின்பு சாட்சிகள் தலைமை காவலர் ஆறுச்சாமி, 2ம் நிலை காவலர் வெங்கட்ராஜ், புகார்தாரர்

சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. ஆறுச்சாமி தலைமை காவலருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் தகுதி உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவும் அவருக்கு அதிகாரமுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கும் கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கவும் ஒரு காவலர் இருக்கும் போது ஏன் காவலர் அல்லாத வருவாய் அதிகாரி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார் என்று விசாரித்தேனா என்றால் தேர்தல் பணி நடந்து கொண்டிருக்கும் போது அ.சா.1 ற்கு கீழ் காவலர்கள் பணிபுரிந்ததால் காவலர்களுக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய அப்போது அதிகாரம் இல்லை.

2. அ.சா.1 சக்திவேல் தேர்தல் பணியில் இருந்தார் என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணம் கைப்பற்றினேனா என்றால் அவரது அடையாள அட்டையை காண்பித்தார். அதன் நகலை நான் வாங்கவில்லை. அ.சா.1 அன்றைய தினம் தேர்தல் பணியிலேயே இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 10 கி.மீ தொலைவு இருக்கும். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு அ.சா.1 தான் எதிரியை அவரது வாகனத்தில் வைத்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

3. வருவாய்த்துறையினர் கைது செய்யும் போது அதற்கான குறிப்பாணை கொடுக்கப்பட வேண்டும், அவ்வாறு அ.சா.1 குறிப்பாணை கொடுத்தாரா என்றால் இல்லை. நான் சொன்ன, நேரம் விதத்தில் எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. தேர்தல் பணிக்காக ஒதுக்கப்பட்ட

காவலர்களை தவிர சாதாரணமாக அங்கு பணிபுரியும் மற்ற காவலர்கள் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

4. அ.சா.1 உடன் பணிபுரிந்தவர்கள் அனைவரும் ஒரே குழுவாக தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் பொய் சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றதா என நான் சம்பவயிடத்தில் மற்ற தனிப்பட்ட சாட்சிகள் யாரையாவது விசாரித்தேனா என்றால் இல்லை. வருவாய் அலுவலர் புள்ளவிவர கணக்கிற்காக கொடுத்த புகாரை தவறான தகவலின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கு ஆவணங்களை நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் ராணுவ கேன்டீனில் மட்டும் ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டும் கிடைக்கதக்க வகை மதுபான பாட்டில்கள் என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரி மதுபான பாட்டில்களை விற்பனை செய்வதாக தெரிந்ததா என்றால் இல்லை. நான் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,<br>
Judicial Magistrate (FAC),<br>
Coonoor.